# Refugee Council
help and advice

May 2008 Tamil

# குழந்தைகளுக்கான பள்ளிகள் - அகதி பெற்றோருக்கான தகவல் விவரத்தாள்

- 5 முதல் 16 வயது வரையில் குழந்தைகளுக்கு பள்ளிக்குச் செல்லவும் மற்றும் 3 வயது 3 மாதங்களில் நர்சரி பள்ளிக்குச் செல்லவும் உரிமை உள்ளது. உங்கள் குழந்தைகளுக்கான பள்ளி ஒன்றைக் கண்டறிவதற்கு உங்கள் உள்ளூர் கல்வி அமைப்பு (local education authority - LEA) உங்களுக்கு உதவும்.
- குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது சட்டபூர்வ தேவையாகும் மற்றும் அவர்கள் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்வது உங்களுடைய பொறுப்பாகும். தகுந்த காரணமின்றி அவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை என்றால், நீங்களும் உங்கள் குழந்தையும் பிரச்னைகளை சந்திக்க வேண்டியிருக்கும்.
- உடல்நலக் குறைவு காரணமாக உங்கள் குழந்தையால் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை என்றால், அது குறித்து இயன்றவரை விரைவாக நீங்கள் பள்ளிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
- பள்ளிகள், தங்களுக்கென தனி தொடக்க மற்றும் முடிவு நேரங்களைக கொண்டுள்ளன. காலையில் பதிவுக்காக சரியான நேரத்தில் உங்கள் குழந்தைகள் பள்ளிக்கு வருவது மிகவும் முக்கியமாகும்.

## நீங்களும் பள்ளியும்

- உங்கள் குழந்தையின் முன்னேற்றத்தைப் பற்றி கலந்தாலோசிப்பதற்காக ஆசிரியர்களை சந்தித்துப் பேச உதவும் பெற்றோருக்கான மாலை நேர சந்திப்புகளுக்குச் செல்வதன் மூலம் உங்கள் குழந்தையின் பள்ளி வாழ்க்கையில் உங்களை நீங்கள் ஈடுபடுத்திக் கொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும். மற்றவர்களை சந்திப்பதற்கான ஒரு சிறந்த இடமாக பள்ளிகள் அமைகின்றன. அவர்கள் எப்போதுமே பெற்றோரைஇன்முகத்துடன் வரவேற்பதுடன், உங்களிடம் பேசுவதையும் பெரிதும் விரும்புகின்றனர்.
- உங்கள் குழந்தைகளுக்கு வழக்கமான வீட்டுப் பாடப் பயிற்சிகள் அளிக்கப்படும் மற்றும் அவர்கள் அதனை அவசியம் பூர்த்தி செய்ய வேண்டும். உங்களால் முடியுமானால், வீட்டுப் பாடத்தில் அவர்களுக்கு உதவுவதன் மூலம் உங்களை நீங்கள் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள், அதே சமயம் அவற்றைச் செய்வதற்கு அவர்களுக்கு வீட்டில் நேரமிருப்பதையும் மற்றும் அவை சரியான நேரத்தில் பூர்த்தி செய்யப்படுவதையும் உறுதி செய்து கொள்ளுங்கள். வீட்டுப் பாடங்கள் எப்போதுமே தாமதமாக அளிக்கப்பட்டாலோ அல்லது பூர்த்தி செய்யாமல் விடப்பட்டாலோ, ஆசிரியருடன் உங்கள் குழந்தைக்கு பிரச்னை ஏற்படக்கூடும்.



British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom

- குழந்தை பள்ளியில் இருக்கும்போது உங்களுக்கோ அல்லது உங்கள் குழந்தைக்கோ ஏதேனும் பிரச்னைகள் ஏற்படுமானால், உங்கள் குழந்தையின் ஆசிரியர்கள் யார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு இருக்கக்கூடிய ஏதேனும் பிரச்னைகள் தொடர்பாக உங்களுடன் கலந்தாலோசிக்கும் பொருட்டு உங்களை சந்திப்பதில் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

## தவறான நடத்தை

- உங்கள் குழந்தையின் நடத்தை சரியில்லையென்றால், கூடுதல் அல்லது முடிக்கப்படாத பாடங்களை முடிப்பதற்காக அல்லது அவர்களது ஆசிரியருக்கு உதவும் பொருட்டு பள்ளியில் கூடுதல் நேரத்திற்கு அவர்கள் தங்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். இது தங்க வைக்கப்படுதல் என்று அழைக்கப்படுகிறது. ஒரு குழந்தை தண்டனையாக அதிக நேரம் தங்க வைக்கப்படுவதற்கு, அந்த ஆசிரியர் 24 மணிநேர முன்னறிவிப்பை உங்களுக்கு அளிக்க வேண்டும்.
- உடல்ரீதியான தண்டனை சட்டத்திற்குப் புறம்பானது மற்றும் அது பள்ளிகளில் பயன்படுத்தப்படுவதில்லை.

## சாதனம்

- உங்கள் குழந்தை பள்ளியின் சீருடையை அணிய வேண்டியிருக்கும். இதற்கான செலவுகளைச் செய்வதற்கு நீங்கள் சிறிது உதவி பெறக்கூடும் - தயவுசெய்து இது குறித்து உங்கள் குழந்தையின் பள்ளியில் விசாரிக்கவும். உடற்பயிற்சிக் கல்வி (PE) வகுப்புகளுக்கு வேறு வகையான உடைகளும் அவர்களுக்குத் தேவைப்படக்கூடும். குழந்தைகள் சரியான சீருடை அணிந்திராவிட்டால், அவர்கள் வீட்டிற்கு திருப்பி அனுப்பப்படலாம்.
- பள்ளியில் உங்கள் குழந்தைக்குத் தேவைப்படக்கூடிய சில அடிப்படை சாதனங்களான பேனாக்கள், பென்சில்கள், அழிரப்பர்கள் மற்றும் அளவுகோல்கள் போன்றவற்றை நீங்கள் அளிக்க வேண்டியிருக்கும். உங்கள் குழந்தைக்கு, தனது புத்தகங்கள், பென்சில் பெட்டி மற்றும் உடற்பயிற்சி வகுப்பிற்கான சீருடை ஆகியவற்றை வைக்கக்கூடிய பொருத்தமான பை ஒன்றும் தேவைப்படக்கூடும். நீங்கள் என்ன வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கு, உங்கள் குழந்தையின் பள்ளியைத் தொடர்பு கொண்டு விசாரிக்கவும்.

## மதிய உணவு

- உங்கள் குழந்தையின் பள்ளி, மதிய உணவு நேரத்தில், வெதுவெதுப்பான சூட்டில் உங்கள் குழந்தைக்கு மதிய உணவை வழங்கும். இவை அடைக்கலம் நாடும் குழந்தைகளுக்க இலவசமாக வழங்கப்படுகின்றன. யூகேயில் தங்குவதற்கு உங்களுக்கு அனுமதி இருக்குமானால், இந்த உணவுகளுக்கு பணம் செலுத்துவதற்கு நீங்கள் உதவி பெறக்கூடும் - தயவுசெய்து விவரங்களுக்கு உங்கள் பள்ளியைத் தொடர்பு கொள்ளவும். மாற்று ஏற்பாடாக, தங்களுடன் பள்ளிக்கு எடுத்துச் செல்வதற்கு உங்கள் குழந்தைக்கு குளிர்ந்த, பேக் செய்யப்பட்ட மதிய உணவை நீங்கள் கொடுத்தனுப்பலாம்.

## பள்ளிக்குச் செல்லுதல்

- உங்கள் குழந்தையின் பள்ளியிலிருந்து நீங்கள் நீண்ட தூரம் தள்ளி குடியிருந்தால், அவர்கள் பள்ளிக்கு பயணம் செய்யும் செலவிற்கு நீங்கள் ஏதேனும் உதவியைப் பெறக்கூடும். கூடுதல் விவரங்களுக்கு உங்கள் பள்ளியையோ அல்லது உங்கள் உள்ளூர் கல்வி அமைப்பையோ தொடர்பு கொள்ளவும்.

## துன்புறுத்தப்படுதல் (Bullying)

- உடல்ரீதியாக இருந்தாலும் அல்லது வாய்மொழியாக இருந்தாலும், துன்புறுத்துவது வேதனை தரும் நடத்தையாகும். உங்கள் குழந்தைகள் பள்ளியில் இருக்கும்போது இத்தகைய துன்புறுத்தப்படும் பிரச்னைகளுக்கு ஆளானாலோ, அல்லது உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தாலோ, உங்கள் குழந்தையுடன் மற்றும் அவர்களது ஆசிரியர்களுடன் நீங்கள் பேசுவது மிகவும் முக்கியமாகும். பள்ளியின் துன்புறுத்தல் எதிர்ப்புக் கொள்கை பற்றி அறிந்து கொள்ள முயற்சிக்கவும் மற்றும் இந்சூழ்நிலைக்குத் தீர்வு காண்பதற்கு பள்ளி மற்றும் ஆசிரியர்களுடன் சேர்ந்து பணி மேற்கொள்ளவும். விளைவுகள் குறித்து நீங்களும் உங்கள் குழந்தையும் மகிழ்ச்சியடையும் வரை இப்பிரச்னையில் முனைப்புடன் ஈடுபடுவதற்கு பயப்பட வேண்டாம். உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருப்பின், ஆலோசனைக்கு பெற்றோருக்கான சிறப்பு எண்ணில; (Parentline Plus) அழைக்கவும் மற்றும் விவரங்களுக்கு 0808 800 2222 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

## குழந்தைப் பராமரிப்பு

- நீங்கள் வசிக்கும் பகுதியில், குழந்தை பராமரிப்பு சேவைகள் மற்றும் குடும்ப உதவி சேவை இருக்கக்கூடும்.
  இவை பற்றி அறிந்து கொள்வதற்கு, உங்கள் பகுதியிலுள்ள குழந்தைகளுக்கான தகவல் சேவையை (Children's Information Service) நீங்கள் அழைக்க வேண்டும். குழந்தைப் பராமரிப்பு இணைப்பை (ChildcareLink) இலவச தொலைபேசி எண்ணான 0800 234 6346ல் அழைப்பதன் மூலம் இந்தத் தொலைபேசி எண்ணை நீங்கள் பெறலாம்.